# <u>தூத்துக்குடி மாநகராட்சி</u>
## <u>கூட்டப்பொருள்</u>

2020ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## <u>பொருள்</u>

| | | |
|---|---|---|
| 26.02.2020 | **1)** தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டல பகுதிக்குட்பட்ட வார்டு எண். 34 மடத்தூர் தெற்கு தெரு, தேவர் தெரு, நடுத்தெரு ஆகிய தெருக்களில் உள்ள சாலையானது மிகவும் சேதமடைந்து போக்குவரத்து மற்றும் பொதுமக்கள் செல்வதற்கு சிரமமாக உள்ளபடியால் மேற்கண்ட பகுதியில் தார்சாலை அமைக்க வேண்டியது அவசியமாகிறது. பொதுமக்களின் நலன் கருதி மேற்படி பகுதியில் சிறுபாலம் மற்றும் புதிதாக தார் சாலை அமைக்கும் பணியினை ரூ 25.65 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் அ.னமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. | **61)** அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |
| **வ.எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு (இலட்சத்தில்)** |
| 1 | மேற்கு மண்டல பகுதிக்குட்பட்ட வார்டு எண். 34 மடத்தூர் தெற்கு தெரு தேவர் தெர நடுத்தெரு ஆகிய தெருக்களில் உள்ள சாலை பழுதடைந்துள்ளது. மேற்படி பகுதியில் சிறுபாலம் மற்றும் புதிதாக தார் சாலை அமைக்கும் பணி. | **25.65** |
| | **மொத்தம்** | **25.65** |
| | எனவே மேற்படி இடத்தில் சிறுபாலம் மற்றும் தார் சாலை அமைக்கும் பணியினை மதிப்பீட்டு தொகை ரூ. 25.65 இலட்சத்தில் பொது நிதி மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் மூலம் வரப்பெற்ற வளர்ச்சி கட்டண நிதியின் மூலம் பணிகள் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>**1)** மாமன்றம் அனுமதிக்கலாம்<br>**2)** மாநகராட்சி பொது நிதி மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவின் வரன்முறைப்படுத்துதல் வளர்ச்சி கட்டண நிதி மூலம் ஈடு செய்யவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>இ2/03718/2019 | |

| | | |
|---|---|---|
| | 2) இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் ஸ்மார்ட் சிட் பணியில் தூத்துக்குடி மாநகராட்சி ( Development of Pearl Beach at North Beach Road in Thoothukudi City Municipal Corporation ABD area பணிக்காக ரூ 4,45,00,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 12.02.2020 அன்று வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப உறை 13.02.2020 அன்று திறக்கப்பட்டது.<br><br>1)J. Suresh Jeyakumar ஒப்பந்ததாரர்<br>2) S. Rambola ஒப்பந்ததாரர்<br>மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்பகுதிகள் கூர்ந்தாய்வு செய்ப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிக்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பித்துள்ளதன் அடிப்படையில் தீர்மான எண். 280 நாள் 18.02.2020ல் தொழில்நுட்ப கமிட்டியால் கீழ்காணும் இரண்டு ஒப்பந்ததாரர்கள் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதாக விலைப்புள்ளி உறை தேர்வு செய்யப்பட்டது.<br>1. J. Suresh Jeyakumar ஒப்பந்ததாரர்<br>2. S. Ramola ஒப்பந்ததாரர்<br><br>மேற்படி தொரில்நுட்ப தகுதி பெற்ற ஒப்பந்தாரரின் விலைப்புள்ளி உறைகள் உரிய அறிவிப்புகள் அனுப்பி வைக்கப்பட்டு 24.02.2020ஆம் தேதியன்று உறை திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் கீழ்க்கண்டுள்ளவாறு விலைவிகிதம் அளித்திருந்தனர்.<br><br>J. Suresh Jeyakumar ஒப்பந்ததாரர்<br>மதிப்பீட்டை விட 4.72 சதவிகிதம் அதிகம் (ரூ. 3, 63,03.942.00)<br><br>2. S. Ramola ஒப்பந்ததாரர்<br>மதிப்பீட்டை விட 6.76 சதவிகிதம் அதிகம் (ரூ. 3, 70,10.107.00)<br><br>இதில் வரிசை எண். L1 ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 4.72சதவிகிதம் அதிகமாக கொடுத்துள்ளதன் பேரில் மேற்படி L1 ஒப்பந்ததாரரிடம் 25.02.2020 அன்று விலை குறைப்பு செய்து கொடுக்க கோரப்பட்டதன் அடிப்படையில் ஒப்பந்ததாரரிடம் 26.02.2020ஆம் தேதியன்று விலைகுறைப்பு செய்து கடிதம் கொடுத்துள்ளதன் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல் விகிதம் வருமாறு.<br>1. J.Suresh Jeyakumar ஒப்பந்ததாரர்<br>மதிப்பீட்டை விட 4.53 சதவிகிதம் அதிகம்<br>(ரூ. 3, 62,36.362.00)<br>2. S. Ramola ஒப்பந்ததாரர்<br>மதிப்பீட்டை விட 6.76 சதவிகிதம் அதிகம்<br>(ரூ.3,70,10,107.00) | 62) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | J.Suresh Jeyakumar ஒப்பந்ததாரர் விலை குறைப்புக்குப்பின் மதிப்பீட்டை விட 4.53% (3,62,36,362.00) அதிகம் அளித்துள்ளனர். பொறியியல் கையேடு பிரிவு II விதி எண் 2.72–ல் பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டுத்தொகையினை விட கூடுதலாக 5% வரை மாமன்றம் அனுமதிக்க அதிகாரம் வழங்கி குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் J.Suresh Jeyakumar ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 4.53% (ரூ. 3, 62,36.362.00) சரக்கு மற்றும் சேவை வரி இல்லாமல்) அதிகம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஸ்மார் சிட்டி திட்ட பணியின் அவசர அவசியம் கருதி அங்கீகரிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு<br>1) மதிப்பீட்டை விட 4.53% அதிகமாக கொடுத்த J.Suresh Jeyakumar ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வாங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>2) இப்பணியின் மதிப்பீட்டை விட கூடுதலாக ஏற்படும் செலவினத் தொகையை மாநகராட்சி பொது நிதி (அ) ஸ்மார் சிட்டி திட்ட நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.<br><br>இ1/3209/2015 ( MNP) | |
| | 3)இம்மாநகராட்சியில் செயல்படுத்தப்படும் ஸ்மார்ட் சிட் பணியில் தூத்துக்குடி மாநகராட்சி (Providing Internal Plumbing arrangements for Under Ground Sewerage Scheme HSC Connections from Property to Boundary in Thoothukudi ABD area பணிக்காக ரூ 10,72,00,000/– மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ள பணிக்கு 12.02.2020 அன்று வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப உறை 13.02.2020 அன்று திறக்கப்பட்டது.<br><br>1) M/S. Motherland Builders ஒப்பந்ததாரர்<br>2) S. Sutharson ஒப்பந்ததாரர்<br>மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்பகுதிகள் கூர்ந்தாய்வு செய்ப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப தகுதிக்கு தேவையான ஆவணங்களை சமர்ப்பித்துள்ளதன் அடிப்படையில் தீர்மான எண். 281 நாள் 18.02.2020ல் தொழில்நுட்ப கமிட்டியால் கீழ்காணும் இரண்டு ஒப்பந்ததாரர்கள் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளதாக விலைப்புள்ளி உறை தேர்வு செய்யப்பட்டது.<br><br>1 M/S. Motherland Builders ஒப்பந்ததாரர்<br>2) S. Sutharson ஒப்பந்ததாரர்<br><br>மேற்படி தொரில்நுட்ப தகுதி பெற்ற ஒப்பந்தாரரின் விலைப்புள்ளி உறைகள் உரிய அறிவிப்புகள் அனுப்பி வைக்கப்பட்டு 24.02.2020ஆம் தேதியன்று உறை திறக்கப்பட்டு | 63) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |

ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் கீழ்க்கண்டுள்ள வாறு விலைவிகிதம் அளித்திருந்தனர்.

1) M/S. Motherland Builders ஒப்பந்ததாரர்
மதிப்பீட்டை விட 6.82 சதவிகிதம் அதிகம் (ரூ. 9, 46,45.045.00)

2) S. Sutharson ஒப்பந்ததாரர்
மதிப்பீட்டை விட 11.35 சதவிகிதம் அதிகம் (ரூ. 9, 86,55,125.00)

இதில் வரிசை எண். L1 ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 6.82சதவிகிதம் அதிகமாக கொடுத்துள்ளதன் பேரில் மேற்படி L1 ஒப்பந்ததாரரிடம் 25.02.2020 அன்று விலை குறைப்பு செய்து கொடுக்க கோரப்பட்டதன் அடிப்படையில் ஒப்பந்ததாரரிடம் 26.02.2020ஆம் தேதியன்று விலைகுறைப்பு செய்து கடிதம் கொடுத்துள்ளதன் அடிப்படையில் ஒப்புநோக்கு பட்டியல் விகிதம் வருமாறு.

1) M/S. Motherland Builders ஒப்பந்ததாரர்
மதிப்பீட்டை விட 4.58 சதவிகிதம் அதிகம்
(ரூ. 9, 26,62,370.00)
2) S. Sutharson ஒப்பந்ததாரர்
மதிப்பீட்டை விட 11.35 சதவிகிதம் அதிகம்
(ரூ.9,86,55,125.00)

M/S. Motherland Builders ஒப்பந்ததாரர் விலை குறைப்புக்குப்பின் மதிப்பீட்டை விட 4.58% (ரூ. 9,26,62,370.00) அதிகம் அளித்துள்ளனர். பொறியியல் கையேடு பிரிவு II விதி எண் 2.72–ல் பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டுத்தொகையினை விட கூடுதலாக 5% வரை மாமன்றம் அனுமதிக்க அதிகாரம் வழங்கி குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் M/S. Motherland Builders ஒப்பந்ததாரர் மதிப்பீட்டை விட 4.58% .(ரூ. 9,26,62,370.00) சரக்கு மற்றும் சேவை வரி இல்லாமல்) அதிகம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஸ்மார் சிட்டி திட்ட பணியின் அவசர அவசியம் கருதி அங்கீகரிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1) மதிப்பீட்டை விட 4.58% அதிகமாக கொடுத்த M/S. Motherland Builders ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வாங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பணியின் மதிப்பீட்டை விட கூடுதலாக ஏற்படும் செலவினத் தொகையை மாநகராட்சி பொது நிதி (அ) ஸ்மார் சிட்டி திட்ட நிதியிலிருந்து செலவு மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ1/3209/2015 ( UGSS HSC)

| | | |
|---|---|---|
| | 4) தூத்துக்குடி மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 34 துரைக்கனி நகர் மடத்தூர் பைபாஸ் ரோடு முதல் இபி காலனி மற்றும் நியு சுந்தர் நகர் ஆகிய தெருப்பகுதிகளில் நான்காவது பைப்லைன் திட்டத்தின் கீழ் பகிர்மான குழாய்கள் பதிக்கப்படாமல் விடுபட்டு உள்ளபடியால், மேற்படி பகுதியில் உள்ள வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படாமல் உள்ளது. எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்படி பகுதியில் உள்ள வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்க ஏதுவாக மேற்படி பகுதியில் புதிதாக பகிர்மான குழாய் பதிக்கும் பணியினை ரூ. 26.10 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு மாமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. | 64) அலுவலகக் குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது. |
| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
| 1 | மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 34 துரைக்கனி நகர் மடத்தூர் பைபாஸ் ரோடு முதல் இபி காலனி மற்றும் நியு சுந்தர் நகர் ஆகிய தெருப்பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்வது துரைக்கனி நகரில் குடிநீர் விநியோகம் குழாய் பதிக்கும் பணி. | 26.10 |
| | **மொத்தம்** | **26.10** |
| | எனவே பொதுமக்களின் நலன் கருதி மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணியினை மதிப்பீட்டு தொகை ரூ. 26.10 இலட்சத்தில் குடிநீர் நிதி மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் மூலம் வரப்பெற்ற வளர்ச்சி கட்டண நிதியின் மூலம் பணிகள் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>1) மாமன்றம் அனுமதிக்கலாம்<br>2) மாநகராட்சி குடிநீர் நிதி மற்றும் அனுமதியற்ற மனைப்பிரிவின் வரன்முறைப்படுத்துதல் வளர்ச்சி கட்டண நிதி மூலம் ஈடு செய்யவும் மாமன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். இ2/00552/20 | |
| | 5) தூத்துக்குடி மாநகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு அச்சுறுத்தலாகவும், போக்குவரத்திற்கு இடையூறாகவும் சுற்றித்திரியும் தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் பணி மாமன்ற அனுமதி பெற்று ஏற்கனவே நடந்து முடிவடைந்துள்ளது. இந்த நிலையில் மேலும் இப்பணியினை தீவிரமாக மேற்கொண்டு மாநகரில் தெரு நாய்களை கட்டுப்படுத்த 2000 (இரண்டாயிரம்) தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் பணியினை செய்வதற்கு அனுமதியும் மேலும் நாய் ஒன்றிற்கு கருத்தடை அறுவை சிகிச்சை மேற்கொள்ள ரூ. 700/– வீதம் 200 தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி போடும் பணியினை Jeeva Karunya Welfare Charitable Trust என்ற நிறுவனம் பணி மேற்கொள்ள அனுமதியும், அதற்காகும் செலவுத்தொகையை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | 65) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக் குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்<br>எச்2/11648/10 | |
| | 6) தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான தச்சா் தெரு மாநகராட்சி சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினை தங்களுக்கு உயா்ந்தபட்ச குத்தகை தொகை அடிப்படையில் 01.08.2019 முதல் 31.07.2020 வரை மூன்றாண்டு தொகுப்பு காலத்திற்கு உரிமம் வழங்கப்பட்டது. இந்நிலையில் தூத்துக்குடி தச்சா் தெரு மாநகராட்சி சந்தையில், சீா்மிகு நகர திட்டத்தின் கீழ் அனைத்து நவீன உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ள உரிய அனுமதி பெறப்பட்டு இதற்கான கட்டுமானப் பணிகள் விரைவில் துவக்கப்பட உள்ளது. மேற்படி சந்தை மேம்பாடு அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளதால் தச்சா் தெரு மாநகராட்சி சந்தையில கட்டணம் வசூல செய்யும் உரிமத்தினை தூத்துக்குடி மாநகராட்சியின் 2019–2022 வரையிலான ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையில் வரிசை எண். 3, 17 மற்றும் 21எ ஆகியவைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொது ஏல நிபந்தனைகளின்படி ரத்து செய்வதற்கும், மேற்படி உரிம இனத்திற்கு செலுத்தப்பட்டுள்ள கூடுதல் வைப்புத் தொகை ரூ. 15,000/– குத்தகை தொகை காசோலையாக குத்தகைதாரருக்கு வழங்குவதற்கும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு சமா்ப்பிக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு:** ஒப்புதல் வழங்கலாம்.<br>ந.க.எண். அ16/0029/19 | 66) அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கப்பட்டது. |

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்.26.02.2020

ஆணையா் (ம) தனி அலுவலா்
தூத்துக்குடி மாநகராட்சி